சிவமயம்

# நவமலர்

யாழ் - இந்துக் கல்லூரி
இந்து இளைஞர் கழக
விஜயதசமி வெளியீடு

*மலர் மூன்று*

*துந்துபி ஸ்ரீ ஐப்பசி மீ 10 உ*
27 - 10 - 1982

உ
சிவமயம்

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கு
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உள மகிழ்ந் தென்றும்.

கலைபயில் கழகமும் இதுவே — பல
கலைமலி கழகமும் இதுவே — தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவேம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே!
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே!
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!

வாழ்க! வாழ்க! வாழ்க!
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

உ

## அடிக்கமலங்கள் போற்றி



பொங்குருச் செல்வம் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருளவல்ல இணையிலா எம்பிராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கமலங்கள் போற்றி

— வேப்பத்தூரார் திருவிளையாடல்.

உ
சிவமயம்



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பேராயிரம் பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீரா நோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்க டீயெழத்திண் சிலைகைக் கொண்ட
பேரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கினேனே.

## திருவாசகம்

ஏர்தருமே ழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை யழகமர் வண்டோதரிக்குப்
பேரருளின்ப மளித்த பெருந்துறைமேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டிநாடனைக் கூவாய்.

## திருவிசைப்பா

கடியார் கணம்புல்லர் கண்ணப்ப ரென்றுன்
அடியா ரமருலக மாளநீ யாளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக் கூத்தாடினையே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெலாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமு
மினியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்ற பேறிதனு
லெற்றைக்குந் திருவருளுடையோம்
நன்றியி னெறியி லழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனு முய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தன மென்பார்.

திருச்சிற்றம்பலம்.



## அபிராமி அந்தாதி

மனிதருந் தேவருமாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடை
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த [மேற்
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதை
நெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றேமுன்செய்
புண்ணியமே

### சக்தி தோத்திரம்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய். — காளமேகம்.

ஆயகலைகள் அறுபத்து நான் கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பள் இங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் — துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி.

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத்தேவி செஞ்சொற்
றூர் தந்த என்மனத் தாமரை யாட்டி சரோருகமேல்
பார்தந்த நாதன் இசைதந்த வாரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதியம் போருகத்தாளை வணங்குதுமே.
—கம்பர்

உ
சிவமயம்



# சரசுவதி தோத்திரம்

## 1. உள்ளத்தில் எழுந்தருள வேண்டுதல்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொளித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

## 2. நாற்கவி பாடும் திறம் அருள வேண்டுதல்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே.

### 3. தமிழாகிய அமுதைச் சுவைக்கும் திறன் வேண்டுதல்

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
    தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
    லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
    கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே!
    சகல கலாவல்லியே.

### 4. சொற்சோர்வுபடாமற் பேசும் நாவன்மை வேண்டுதல்

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
    கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
    வாய்வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
    தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
    சகல கலாவல்லியே.

### 5. நெஞ்சத் தாமரையில் எழுந்தருள வேண்டுதல்

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
    பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
    னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
    நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
    சகல கலாவல்லியே.

### 6 முத்தமிழிலும் முழுமையான பயிற்சி வேண்டுதல்

பண்ணும் பரதமும் கல்வியுந்
    தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
    காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
    கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
    சகல கலாவல்லியே!

### 7. சொல்லிய பாட்டின் பொருள் உரை வேண்டுதல்

பாட்டும் பொருளும் பொருளாற்
    பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
    காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
    லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
    சகல கலாவல்லியே.

### 8. அட்டாவதானம் முதலியன அருளும்படி வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான
    முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
    வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
    முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
    சகல கலாவல்லியே.

**9. சொல்லுக்கும் பொருளுக்கும் உயிர் உண்மை அறிவு. உண்மை அறிவின் உருவே கலைமகள் எனல்.**

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
    ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
    யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
    டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே
    சகல கலாவல்லியே.

**10. மன்னர்களும் மதிக்கத்தக்க அறிவுப் பெருக்கம் வேண்டல்**

மண்கண்ட வெண்குடைக் கீழாக
    மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
    வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
    டேனும் விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
    சகல கலாவல்லியே.

— சுபம் —

## வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளையின்பம் குலவுகவிதை
கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உண்ணின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணைவாசகத் துட்பொருளாவாள்
(வெள்ளைத்)

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளனவூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வியிலாத தொரூரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்.
(வெள்ளைத்)

— பாரதியார்

உ

## இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. க. அவர்களின்

## அருளாசி

யாழ் - இந்துக் கல்லூரி
**இந்து இளைஞர் கழக மூன்றுவது வெளியீடு**
"நவமலர்" "விஜயதசமி" என்ற
தொடர்களால்,
நவராத்திரியை
இராத்திரி தோறும்
அநுட்டிக்கும் முறைகளையும்,
தசமியில்
ஒவ்வொருவரும்
தாம் தாம்
முகந்து கொண்ட
கலைத் துறையில்
"விஜயம்"
எனப்படும்
வீறு பெறுவதையும்,
நினைவு படுத்துகின்றது.

மலர்
இதழ் தோறும்
'சக்தியின் பெருமை'
நிகழ்வதாக;
ஆண்டு தோறும்
வெளிவரும்
'நவமலர்'களுக் கெல்லாம்
வழிகாட்டியாய்
கால் கோளாய், அமைவதாக
என்றிங்ஙனம்
திருவருளைப் பிரார்த்தித்து
வாழ்த்துவோமாக

**சி. கணபதிப்பிள்ளை**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
12-10-82.

## அதிபரின் வாழ்த்து

நவமலரின்
மூன்ருவது இதழ்
சிறப்பாக மலர்கிறது.
கல்லூரியிற் சமய வாழ்வின்
உயிர்த் துடிப்பு நிலையம் இந்து
இளைஞர் கழகம்; சைவமணம்
பரப்பும் பூங்கா. அதன் சக்தி
மலர் இது. இம் மலர் வழமை
போல் இனிதே மலர்ந்து
தேவியின் திருவடி
களில் சமர்ப்
பணமாகத்
திருவருளை வேண்டி
வாழ்த்துகின்றேன்.
வாழ்க சிவத் தொண்டு

பொ. ச. குமாரசுவாமி
அதிபர்

உ

கணபதி துணை

# நவராத்திரி விரதம்

"ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்ப ளிங்குவாரா திடர்"

கலைகள் எல்லாவற்றையும் உணர்விக்கும் இறைவியாகிய சக்தியைக் குழந்தையாகவும் கன்னியாகவும் குமரியாகவும் தாயாகவும் தேவியாகவும் வழிபடும் தினங்களே நவராத்திரி என்னும் ஒன்பது நாட்களாகும்; சக்தி விரதங்களில் சுக்கிரவாரம், ஐப்பசி உத்தரம், ஆடிப்பூரம், நவராத்திரி என்பனவற்றில் நவராத்திரி விரதம் முக்கியமானதாகும்; கன்னித் திங்கள் எனப்படும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற வளர்பிறைக் காலத்தில் பிரதமை முதல் நவமியீருகவுள்ள ஒன்பது தினங்கள் நவராத்திரி விரதத்திற்குரியனவாகும். இந்நாட்களில் தேவி பூஜையானது இராத்திரியில் விசேஷமாக நடத்தப்படுவதால் நவராத்திரி எனப் பொருள்படும். இந்நாட்களில் பராசக்தியைப் பிரதமை முதல் மூன்று நாளும் துர்க்காதேவி சொரூபமாகவும், சதுர்த்தி முதல் மூன்று நாளும் இலட்சுமி வடிவமாகவும், சப்தமி முதல் மூன்று நாளும் சரஸ்வதியுருவமாகவும் பாவித்து, கும்பத்திலே ஆவாகனஞ் செய்து பூஜை செய்யப்படும்;

ஆற்றல் இல்லாமல் வாழ்வு இல்லை என்பர். ஆற்றலின் அதிதேவதை சக்தியாகும். சக்தியில்லாமல் எதையுமே செய்யமுடியாது; சக்தியின் அருளே எல்லாச் செயல்களுக்கும் தோன்றாத் துணையாய் இருப்பது; ஆகவே சக்தியைப் போற்றும் விழாவாக நவராத்திரி விரத நாள்கள் அமைந்துள்ளன. விரதம் என்ற சொல்லுக்கு நியமத்துடன் சங்கல்பம் செய்து கொண்டு அனுட்டிக்கும் கருமம் என்று பொருள். வேதமும் தரும சாஸ்திரமும் சுருக்கமாகக் கூறியவற்றை புராணங்கள் மிகவும் விரிவாகக் கூறுகின்றன. பாவங்களை அகற்றுவதற்காக மாத்திரம் செய்யப்படுவன பிரசாபத்தியம், சாந்திராயணம், கிருச்சிரம் முதலியனவாகும்; இவைகளில் உபவாசமே முக்கிய பாவங்களை நீக்கும். இவைகளுள் உபவாசமே முக்கியமானதாகும். இறைவனோடு மிகவும் நெருங்கியிருந்து வழிபடல் என்பது உபவாசம் என்பதின் பொருளாகும்;

விரதங்கள் ஆண்டுக்கொருமுறை வருவனவும், மாதத்துக்கு ஒருமுறை வருவனவும் வாரத்துக்கு ஒரு முறை வருவனவுமாக உள்ளன. விரதங்கள் நித்தியவிரதம், நைமித்தியவிரதம், காமியவிரதம் என மூன்று வகைப்படும். நித்தியவிரதமாவது எமது வாழ்நாளில் நாம் செய்யவேண்டிய அருளுடைமை, இன்னுசெய்யாமை, புலால் உண்

ஞமை, பொய்பேசாமை, கள்ளுக்குடியாமை, களவு செய்யாமை முதலிய நல்லொழுக்கங்களாகும். நைமித்திய விரதமாவது உபவாசமிருந்து அனுட்டித்தலாகும். இதனை மேற் கொள்ளும் போது உணவைவிடுத்தேனும் சுருக்கியேனும் திரிகரண சுத்தியோடு கடவுளை வழிபடுதலாம். காமிய விரதம் என்பது புத்திரப்பேறு, செல்வம், ஆரோக்கியம் முதலிய பயன்களை நாடிச் செய்யப்படுகின்ற சஷ்டி, சம்பத்கௌரி, சாவித்திரி விரதம் போன்றனவாகும்.

தேவியின் பூஜை ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் பராசக்தி பிரமாவில் சரஸ்வதி என்றும், விஷ்ணு மார்பில் இலட்சுமி என்றும், ஈசனிடத்துத் துர்க்கை என்றும் விரிந்து உலகை நடைபெறச் செய்யும் அந்த மூன்று மூர்த்தத்துக்கும் தனியே சாத்துவிகம், இராஜதம், தாமசம் ஆகிய மூவகைக் குணங்கள் காணப்படுகின்றன. ஆகையால் துர்க்கை முதலிய மூன்று சக்திகளுக்கும் தனித்தனி மும்மூன்று நாளாகப் பூசை முதலியன செய்யப்பட ஒன்பது நாட்களும் புண்ணிய விரத நாளாயின.

இன்னும், ஆதியிலே "துர்க்கை பூசை" என்று கும்ப முதலியவற்றில் ஆவாகனஞ் செய்து தேவி மந்திர செபம் முதலியன நடைபெற்று வந்தன என்றும், சர்வ லோகத்திலும் நடைபெறும் ஈசுவரனுடைய சிருஷ்டி முதலிய கிருத்தியங்களுக்கும் அவரால் அனுட்டிக்கப்பட்ட ஏனைத்தேவர் முதலாயினோருடைய ஆட்சிக்கும் சக்தியே துணைக் காரணமாகவுள்ளது என்ற நோக்கத்தால் அவ்வாறு துர்க்கை பூசையும், ஸ்ரீவித்தை முதலிய தேவி மகாமந்திர ஜெபமும் செய்து வந்தார்கள் என்றும், பின்னர் ஸ்ரீராமர் இராவண சங்காரத்தின் பொருட்டு அகத்தியமுனிவரிடம் ஸ்ரீபஞ்சாட்சர மந்திர உபதேசம் பெற்று, புரட்டாதி சுக்கிலபட்சம் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாளும் ஸ்ரீ பராசக்தியைப் பூசை செய்தனர் என்றும், அது முதல் புரட்டாதி மாதத்தில் நவராத்திரி கொண்டாடப்பெற்று வருகிறது என்றும் கூறப்படுகிறது.

மேலும், அம்மையார் பஞ்சாக்கினி மத்தியில் நின்று சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து இடப்பாகம் பெற்ற காலம் நவராத்திரி என்றும், அக்காலத்திலே மகிடாசுரனால் துன்புற்ற தேவர்கள் அம்மையாரை வணங்கி அவ்வசுரனைக் கொன்று தங்களைக் காக்கும்படி வேண்டிநிற்க, அம்மையார் தம்மின் வேறாகாத துர்க்கையை அனுப்பி மகிடாசுரனைக் கொன்று உலகத்திற்கு நன்மை செய்தனர் என்றும், இக் காரணங்களால் நவராத்திரி சக்தி பூஜைக்கு விசேடகாலமாகக் கொள்ளப்படுகிறது என்றும் கூறுவர்.

நவராத்திரியின் போது ஆலயங்களில் ஒன்பது நாளும் பார்வதி, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய நான்கு மூர்த்திகளுக்கும் விசேஷ பூசை செய்யப்படும். இந்நாட்களில் தேவியை மகேஸ்வரி, கௌமாரி, வராகி, மகாலட்சுமி, வைணவி, இந்திராணி, மகா சரஸ்வதி, நாரசிம்மி, சாமுண்டி எனப்பல பெயர்களால் எழுந்தருளச் செய்தும் வணங்குவார்கள். மகா நவமிக்கு அடுத்த நாளாகிய தசமித் திதிவிஜயை என்றும் சக்திக்குரிய தினம் எனவும் அவள் எல்லாக் காரியத்துக்கும் வெற்றிவிளைவிக்கும் சக்தியாகையால் அன்றைய தினம் அவளை ஆராதித்து அவரவர்க்குரிய ஆயுதமோ. வித்தையோ தொடங்கிப் பயிற்சி செய்தால் அவ்வித்தையிற் பூரண சக்தி பெற்று நன்மை பெறலாம் என்பதும் திண்ணமாகும்.

விஜயதசமித்தினத்திலன்று ஒவ்வொரு கோயிலிலும் உள்ள பிரதான மூர்த்தியைப் பூசித்துக் கோயிலுக்கு வெளியே அம்புபோடும் இடத்துக்கு எழுந்தருளச் செய்வர். கடவுள் அம்பு போட்டுக் கொல்லுவது அசுரனையே. அசுரன் எனப்பட்டது ஆன்மாக்களை வருத்தும் மலமாம். ஒரு வன்னி மரத்தை நட்டு, அதை அந்த அசுரனாகப் பாவித்து அந்த மரத்திலே அம்பு போட்டு அதைத் துணிக்கும் பாவனை காட்டப்படுகிறது. இக்காலத்திலே வன்னிமரம் கிடைத்தற்கு அரிதாதலால் ஒரு வன்னிமரக்கொம்பை வாழையிலே பதித்து அவ்வாழை துணிக்கப்படுகிறது. சகல ஆன்மாக்களும் சுகமடைவதற்கு செய்யப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளது.

நவராத்திரி விரதத்தின் போது மனத்தை ஒரு முகப்படுத்தி பொறிவழியே போகவிடாது நின்று, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் சக்தியை விதிப்படி மெய்யன்போடு விசேடமாய் வழிபடுதல் வேண்டும். இவ் விரதத்தினை அநுட்டிப்பதற்கு அதனை மேற்கொள்பவர் ''நான் இதை அநுட்டித்து நிறைவேற்றுவேன்'' என்று சங்கற்பித்துக் காப்புக்கட்டி அல்லது தருப்பை பூண்டு அநுட்டித்தல் முறையாகும். இவர்கள் அறுசுவை உண்டி அருந்தாது. அவர்கள் சாதாரணமாக அவித்த தானியப் புழுங்கல் - புற்கையை உண்ணுதல் வேண்டும். முதலெட்டு நாளும் பணிகாரம், பழம் முதலியவை உட்கொண்டு மகாநவமியன்று உபவாசம் இருத்தல் வேண்டும்.

இவ்விரதத்தினை அனுட்டிப்போர் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரத்தைத் தரித்து, அநுட்டானஞ் செய்து கொண்டு பின்னர், ஆலய தரிசனஞ் செய்து, திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல், சிவத்தொண்டு புரிதல், நல்லவர்களோடு கூடியிருந்து சிவகதைகளைப்

பேசுதல் என்பன உத்தமமாகும். விரதம் அனுட்டிப்போர் தம்மால் இயன்றவரையில் உணவைச் சுருக்குதல் வேண்டுமாகையால் அவர்கள் தீர்த்தம், பால், இளநீர் அருந்துதலே சிறந்ததாகும்.

விரதங்களின் சிறப்பைப்பற்றி ஒளவையார் பாடல்களிலிருந்து ஆகம சுலோகங்கள் வரையும் கூறுகின்றன. எம்மை எல்லாம் காப்பது விரதம், மீதூண் விரும்பேல், நோன்பென்பது கொன்று தின்னாமை, பொல்லாங்கென்பவை எல்லாந் தவிர், மோனமென்பது ஞான வரம்பு, விருந்திலோர்க்கில்லை பொருந்திய வொழுக்கம் எனப் பல வாறு கூறியுள்ளார். இன்னும் மேலைத்தவத்தளவே யாகுமாந் தான் பெற்ற செல்வம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இக் கருத்தையே திருவள்ளுவர் தவத்தின் பெருமையை பின்வருமாறு கூறியுள்ளார்:

''இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்''

அதாவது உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற் குக் காரணம் யாதெனின், அது தவஞ் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல் என்பதே ஆகும்.

நாம் நவராத்திரி விரதத்தை ஒழுங்கு முறைகளுக்கு அமையக் கடைப்பிடித்தால் அவற்றால் உண்டாகும் நன்மைகள் ஏராளமாகும். தேகசுத்தி, நோயின்மை, நீண்டகால வாழ்வு, மனத்தூய்மை, பாவ நீக்கம், நினைத்த காரியசித்தி, மனமகிழ்ச்சி, கடவுள் பக்தி என்னும் பல இஷ்ட சித்திகள் கிடைக்கும். இத்தகைய சக்தியை உபாசனை செய்வதனால் பெறுதற்கரிய பயனைப் பெறலாம் என்று சௌந்தரிய லகரி கூறுகிறது. ஒருவனைப் பேரழகனாக மாற்றுவதும், தேனினும் இனிய வாக்கு வல்லமையுடையவனாக விளங்கவைப்பதும், ஞானானந் தத்தைப் பெறவைப்பதும் சக்தி உபாசனையினாலேயே என்பது சங்கராச்சாரியர் இயற்றிய சௌந்தரிய லகரியின் வாக்காகும். மானிடப் பிறப்பை எடுத்த எமது கடமைகளில் மிக இன்றியமை யாதது இறைவழிபாடேயாகும்.

''மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக்காயம்
ஆனிடத்தைந்து மாடு மரன்பணிக்காக வன்றோ''

என்பதை நினைந்து போற்றி வாழ்வதுடன் கருணைவடிவாக விளங்கு கின்ற சக்தியை நவராத்திரி விரதத்தின்போது உபாசித்து திருவருட் கடாட்சம் பெற்றுய்வோமாக.

ப. கணேசலிங்கம்
12F [கலைப்பிரிவு]

உ
கணபதிதுணை

# சக்தி மகத்துவம்

ஆதிகாலத்தில் உலகில் இருவகைச் சமூக அமைப்புக்கள் காணப் பட்டன; ஒன்று தாய்வழிச் சமூகம், மற்றது தந்தைவழிச் சமூகம்; குடும்பத் தலைவியாய்ப் பெண் முதன்மை பெற்ற சமூகங்களிலே குலமுறைமை தாயைக் கொண்டே அமைந்தது; குடும்ப முதல்வனாய் ஆண் தலைமை பெற்ற சமூகங்களிலே குலமரபு தந்தையைக் கொண்டே அமையலாயிற்று. ஆண் மகன் வேட்டை மேற் கொண்டு வெளியிற் சென்ற காலங்களிலே, வீட்டிலிருந்த வண்ணம் குடும்ப நிருவாகத்தையும் ஓய்வு நேரப் பொழுது போக்காய் உழவுத் தொழிலையும் கைக்கொண்ட பெண்ணானவள் இல்லத் தலைவியானது இயல்பே. மந்தை மேய்த்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்ட ஆண் மகன் தான் வளர்த்த மந்தையைத் தனது சொத்தாய் உரிமை பாராட்டியது போலவே, தன் மனைவியையும் தன் உடைமையெனக் கருதி அவள்மீது ஆதிக்கம் செலுத்தலானான். இவ்வாறு இருவழிச் சமூக அமைப்புக்கள் தோன்றி நீண்டகாலம் நிலைபெற்றன;

மனிதன், உருவமற்ற இறைவனுக்கு உருவம் அமைத்து வழிபடத் தொடங்கிய காலத்தில் அதனைத் தனது சாயையில் உருவாக்கியது முற்றிலும் இயற்கையே. தந்தைவழிச் சமூகத்தினர் தெய்வ வடிவங்களை அமைக்கும் பொழுது அவற்றைப் பெரும்பாலும் ஆண்களாகவே உருவகப்படுத்தினர்; பெண் முதன்மை பெற்ற சமூகங்களிலே தலைமைத் தெய்வம் பெண்ணாகவே உருவகப்படுத்தப்பட்டது; இதனைத் தாய்த் தெய்வம் என்னும் வழக்கமும் ஏற்பட்டது. சிந்து வெளி நாகரிக காலத்திலே அங்கு வாழ்ந்த மக்கள் தாய்த் தெய்வ வழிபாட்டினைக் கொண்டிருந்தமையை இதற்கு எடுத்துக் காட்டாய்க் கொள்ளலாம்.

"இசிசிஸ் (பெண் தெய்வம்) வழிபாடு நிலவிய எகிப்திலும் உரோமாபுரியிலும் ஆண்களிலும் பெண்களுக்குச் சிறப்பும் சொத்துரிமையும் நிலவின" எனவும், சின்னாசியாவில் லிசியா என்ற பிரதேசத்தில் சிபில் என்ற பெண் தெய்வ வழிபாடு அமைந்தது எனவும் பிறேசர் [Frazer] என்னும் ஆய்வாளர் குறிப்பர்; இவர் கூறியவற்றை ஒப்பு நோக்கிய சந்தா என்பவர் கூறுவதாவது: "சாக்த வழிபாடு அதாவது தேவி, அத்யசக்தி (அதிதி), பிரகிருதி, ஜகதாம்பாள் முதலிய சொற்களால் குறிக்கப்படும் நம்பிக்கையானது தாய்வழிச் சமூகத்திலேயே தோன்றியது"

திராவிட இனத்தினரின் பழைய வழிபாட்டு முறைமை பெண் தெய்வத்தையே அடிப்படையாகக் கொண்டது; திராவிடர் வாழ் கின்ற பகுதிகளிலெல்லாம் அன்னை வழிபாடு உண்டு. நிலமும் நிலத் தின் வழிவந்த இயற்கையும் பழந்திராவிடரின் தெய்வக் கோட் பாட்டுக்கு அடிப்படையாயின. பழைய தமிழிலக்கியங்களில் இதற் குப் போதிய சான்றுகள் காணப்படுகின்றன. ஆலமர் செல்வி, முதியோள், அன்னை, காடுகிழாள், பழையோள் முதலான பெயர் கள் தமிழகத்திலே தாய்த் தெய்வ வழிபாடு நிலவிய பழைமையை யும் முதன்மையையும் புலப்படுத்துகின்றன, கொற்றவை பாலை நிலத் தெய்வமாகக் கொள்ளப்பட்டாள்;

சுருங்கச் சொன்னால், தாய்த் தெய்வமாகிய சக்திவழிபாடு உல களாவிய ஒன்றென்பதும், அது திராவிட ஆரிய வழிபாட்டு மரபுக ளில் மிகப் பழங்காலத்திலேயே இடம்பெற்றதென்பதும் குறிப்பிடத் தக்க உண்மைகளாகும்.

இன்று வங்காளத்திலே பிரசித்திபெற்று விளங்கும் சாக்த மதம் அனைத்திந்தியாவிலும் சக்தி வணக்கமாகப் பரந்து காட்சி தருகின்றது; சைவசித்தாந்த நெறியிலே இறைவனின் பின்னமற்ற பகுதியாகப் பராசக்தி விளங்குவது நாம் அறிந்ததே. இந்துக்கள் அனைவருமே நவராத்திரி விழாவின் வாயிலாகச் சக்தி வணக்கத்தினை நிகழ்த்தி வருவது கண்கூடு.

சக்திபற்றிய தத்துவம் மிகவும் ஆழமானது, அகன்றது, அர்த்த புஷ்டியானது. சக்தி சகல அண்டங்களிலும் எல்லாச் சக்திகளுக்கும் காரணமாகவும் ஆதாரமாகவும் உள்ளது. இதனைப் பராசக்தி, ஆதி சக்தி என்ற பெயர்களால் அழைப்பர். வேதங்கள் உபநிடதங்கள் எங்கணும் சக்தியின் பெருமை பேசப்படுவதாய் அறிஞர் உரைப்பர்; "அன்னை பராசக்தி" என்று தமது நூலிலே சக்தி தத்துவம் என்ற பகுதியிலே திரு. எஸ்; நடராஜன் (நஜன்) கூறுவது பின்வருமாறு;

"பிரும்மமே தேவர்களின் பொருட்டுத் தேவாசுர யுத்தத்தில் ஜெயத்தை அடைந்தது; ஆனால் தேவர்கள் வெற்றி பெற்றதாகப் பெருமை கொண்டனர்; அவர்களுக்கு யாதொரு சக்தியும் கிடை யாதென்றும், எல்லாம் தன்னால் தான் உண்டாகிறதென்றும் பிரும் மம், அக்னி, வாயு, இந்திரன் இவர்களுக்குக் காட்டி மறைந்தது; அந்தப் பிரும்மமே ஜகந்மாதாவான பராசக்தி"

"எல்லா வழிபாட்டுக்கும் ஆதாரமாக விளங்குவது சக்தி வழி பாடு; உலகத்தை இயங்கச் செய்வதெல்லாம் இந்தச் சக்தியே; இதைச் சிவவாக்கியர் "சக்தியின் அருள் இன்றேல் ஜகந்தனில் அசைவே

இல்லை என்கிறார். சக்தியும் சிவனும் சேர்ந்தால்தான் மதிப்பு; மனித சரீரத்தில் ரத்தமும் சதையும் போன்றவள் அம்பிகை; எலும்பு போன்றவர் ஈசன். ரத்தமும் சதையும் இருந்தால்தான் உடம்புக்கு அழகு. எலும்பு மட்டும் இருந்தால் பார்க்கவே சகிக்காது. சிவனை விடச் சக்திக்கு ஒன்பது மடங்கு அதிகப் பெருமை என்று தெரிகிறது: இதனால்தானோ என்னவோ சிவனுடைய வழிபாட்டைச் சிவராத்திரி என்ற ஒரே இரவில் நடத்திவிட்டு நவராத்திரி என்று சக்தி வழிபாட்டை ஒன்பது இரவுகளில் கொண்டாடுகிறார்கள்."

சண்மதப் பிரதிஷ் தாபகரான சங்கராச்சாரியார் தமது இராஜராஜேசுவரி அட்டகத்திலே "அந்தி ஈச மோட்சப்ரதா" என்ற சொற்றொடரால் சக்தியைப் போற்றுவர். இதற்கு, வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகள் கூறும் விளக்கம்; "அந்தி - பல பல பிறவிகளில் பல பல தேவர்களை வழிபட்டு அதன் புண்ணிய வசத்தால் தேவியை வழிபடும் அடியார்களுக்கு அப்பிறப்பே முடிவாகி அப்பிறவியின் முடிவிலேயே ஈசமோட்சப்ரதா - சிவபத முக்தியை அருளுபவள் பராசக்தி என்பதே இவ்வாக்கியத்தின் தெளிவான கருத்தாகும்."

இத்தகைய சக்தி ஒன்பது பேதங்களாக ஒன்பது சக்திகளாக உருக் கொள்வாள். இவளுக்குப் பதினெட்டு மூர்த்தி பேதங்கள் கற்பிக்கப்படும்; இவளின் வழிபாடுபற்றிக் கூறும் ஆகமங்கள், தந்திரங்கள் எனப்படும்; கேட்டதெல்லாம் மட்டுமன்றிக் கேளாதவற்றையும் தேவை உணர்ந்து அருள்பவள் தாயாகிய பராசக்தி. வரலட்சுமி விரதம், கேதாரகௌரி விரதம், நவராத்திரி விரதம் ஆகியன அவளை நினைத்து அனுட்டித்தற்குரிய விரதங்கள்,

## நவராத்திரிப் பாட்டு

*(உஜ்ஜயினீ)*

உஜ்ஜயினீ நித்ய கல்யாணீ !
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்சக்தி (உஜ்ஜ)
உஜ்ஜய காரண சங்கர தேவீ
உமா சரஸ்வதீ ஸ்ரீமாதா ஸா (உஜ்ஜ)
வாழி புனைந்து மஹேசுவர தேவன்
தோழி பதங்கள் பணிந்து துணிந்தனம் (உஜ்ஜ)
சத்ய யுகத்தை அகத்தி லிருத்தித்
திறத்தை நமக்கரு ளிச்செய்யும் உத்தமி (உஜ்ஜ)

**வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) M- A.**
விரிவுரையாளர்
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

# நன்றியுரை

(1) சிவராத்திரி விழாவின் போது சமயதீட்சைக்குரிய பொருட்களை யும், விஜயதசமியன்று ஏடு தொடக்குதலுக்கு வேண்டிய ஏடு களையும், புத்தகங்களையும் ஒவ்வொரு முறையும் மனமுவந்து எமக்கு நல்கிவரும் மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்ம வள்ளல் க. கனகராசா அவர்களுக்கும்

(2) திருக்கேதீஸ்வர உற்சவத்தின் போது காலூரி அதிபர், ஆசிரி யர்கள், மாணவர்கள் சென்றபோது வேண்டிய இடவசதியினை அளித்த சிவராத்திரி மடத்தினருக்கும்,

(3) வெள்ளிக்கிழமை தோறும் வகுப்புப் பூஜையை நடாத்தும் சகல மாணவருக்கும், நற்சிந்தனைகள் வழங்குகின்ற ஆசிரியர்களுக்கும், ஒவ்வொரு நாளும் பிரார்த்தனையின் போது தேவாரம் பாடுகின்ற மாணவர்களுக்கும், இதற்கான பயிற்சிகளை அளித்துவரும் இசை யாசிரியர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கட்கும்,

(4) இன்றைய தினம் சிறந்த சொற்பொழிவு ஆற்ற வந்திருக்கும் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கட்கும், நவராத்திரி விழாக் காலங்களில் பலவகையில் உதவிய விடுதி ஊழியர்களுக் கும், இங்கு பணி புரிவோருக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர் களுக்கும்,

(5) என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற வாக்குக்கிணங்க வருடா வருடம் இந்து இளைஞர் கழக சகல வகுப்புப் பிரதிநிதி களும் தம்மால் இயன்றவரையில் உழைத்தமைக்கும் எமது நன்றிகள்.

**இம் மலரை உருவாக்குவதற்கு உதவியோர்கள் பலர்**

தெய்வ மணம், தமிழ் மணம் கமழ ஆசிச் செய்தி அளித்த இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர் களுக்கும், வாழ்த்துச் செய்தியை வழங்கி ஆக்கமும் ஊக்கமும் நல்கிய அதிபர் அவர்கட்கும், கட்டுரை வழங்கிய வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் (M. A.) அவர்கட்கும், தேவையான உதவிகளை வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், மூன்றுவது ஆண்டு மலரை அழகுற அச்சேற்றித் தந்த ஸ்ரீ லங்கா அச்சகத்தாருக்கும் எம் நன்றிகள்.

செயற் குழு
**இந்து இளைஞர் கழகம்.**

## பத்திராதிபர் பேசுகிறுர் ............

சென்ற இரு ஆண்டுகளாக வெளிவந்த 'நவமலர்' இவ்வாண்டும் வெளிவரத் திருவருள் கூட்டியுள்ளது.

நவமலரின் சிறப்புக்கு ஆசிகள் தந்த பெரியோருக்கும், ஊக்கமும், உதவியும் நல்கிய ஆசிரியர்களுக்கும், மாணுக்கர்களுக்கும் என் மணமார்ந்த நன்றி.

கண்கண்ட கலைத்தெய்வமாக எம்மிடையே வாழ்ந்து யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தரும் பண்டிதமணி அவர்கள் நீடுவாழக் கலைத் தெய்வத்தை வணங்குகிறேம்.

*பத்திராதிபர்*

## யாழ் - இந்துக் கல்லூரி சமய ஆலோசனைக் குழு

திரு. பொ. ச. குமாரசுவாமி (அதிபர்)
,, ச. பொன்னம்பலம் (உப அதிபர்)
,, செ. முத்துக்குமாரசுவாமி
,, சு. புண்ணியலிங்கம்
,, கா. மாணிக்கவாசகர்
,, வே. சண்முகலிங்கம்
,, க. குமாரசிங்கம்

திரு. க சிவராமலிங்கம்பிள்ளை
,, வ. தம்பையர்
,, க. நாகலிங்கம்
,, அ. நாகரத்தினம்
,, க. மகேசன்
,, இ. மகாதேவா

செல்வி. த. செல்லத்துரை

## இந்து இளைஞர் கழகச் செயற்குழு 1982

| | |
|---|---|
| புரவலர் | திரு. பொ. ச. குமாரசுவாமி (அதிபர்) |
| பெருந் தலைவர் | ,, செ. முத்துக்குமாரசுவாமி |
| பெரும் பொருளர் | ,, சு. புண்ணியலிங்கம் |
| தலைவர் | செல்வன் ப. கணேசலிங்கம் |
| உபதலைவர் | ,, து. குசேலகுமார் |
| இணைச் செயலர்கள் | ,, க. பாலகுமார் |
| | ,, க. இராஜேஸ்வரன் |
| பொருளர் | ,, செ. இளங்கோ |
| பத்திராதிபர் | ,, மா. கௌரிகரன் |

### நிர்வாக உறுப்பினர்கள்

சோ. சுரேஸ், ப. விக்னேஸ்வரராஜா, ந. ஈசானஸ்ரீ, ந. கௌரிபாலன், சி. இளங்கோ. க. பாஸ்கரன், ம. திலீபன், செ. நிமால், க. ஆனந்தலிங்கம், சி. ரகுபதி, அ. விவேகானந், சிவ. தவவிநாயகன், இ. சிவநேசன், பொ. சத்தியமூர்த்தி, இ. தெய்வேந்திரராசா.

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்; போன் :24175-24211;